தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கான தகவல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் நிறுவனம் செயற்பட்டிருந்தது என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	முகாமைத்துவக் கருத்துரை	பரிந்துரை
(அ)	நடைமுறையிலுள்ள வேலையாக கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 2,690,000 ஆன சூரியப்பலகம் பொருத்தும் செலவு, கடந்த ஆண்டில் செயற்திட்ட அபிவிருத்தி செலவீனமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்த தவறு மீளாய்வாண்டில் சீர் செய்யப்பட்டிருந்த போதிலும், அது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் திருத்தப்பட்டு கடந்த காலத்திற்கேற்றவாறு சீர் செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்கள் திருத்தப்பட்டு, கடந்த காலத்திற்கேற்றவாறு சீர் செய்து சமர்ப்பிக்கப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(ஆ)	ரூபா 553,930 ஆன மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையொன்று மீள்மதிப்பீட்டு அதிகரிப்புடன் ஈடு செய்யப்படாமையினால் கடந்த ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமதியினால் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்த தவறு மீளாய்வாண்டின் சீர் செய்தின் போது இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47 பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் திருத்தப்பட்டு கடந்த காலத்திற்கேற்றவாறு சீர் செய்யப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் நிதிக் கூற்றுக்கள் திருத்தப்பட்டு, கடந்த காலத்திற்கேற்றவாறு சீர் செய்து சமர்ப்பிக்கப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 13 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக இனங்காணப்பட வேண்டிய, நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற 19 ஏக்கர் காணி, ஹம்பந்தோட்டை பழக் கூழ் உற்பத்தி நிலையத்திற்கு சொந்தமான ரூபா 767,835 தொகையான 14 உபகரணங்கள் உறுபடிகள், பயிற்சி நிகழ்ச்சிகளில் காட்சிப் பொருட்களாக பயன்படுத்தப்படும் 43 இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் மாதிரிகள் மற்றும் பொறியியல் பிரிவின் 17 வளிபதனாக்கி இயந்திரங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தின் பெயரில் உரித்து பெறப்படாததுடன், மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீட்டு பெறுமதி பெற்றுக் கொடுக்காமையினால் கணக்குகளில் குறிக்கப்படவில்லை. ஹம்பந்தோட்டை பழக் கூழ் மையத்திலுள்ள உபகரணங்களில் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிராத உறுப்படிகள் பரீட்சித்து பார்த்து நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் நிறுவனம் அலுவலக உபகரணங்கள், வீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீள்மதிப்பீடு தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 90 பந்தியின் பிரகாரம் வெளிப்பத்தப்பட வேண்டிய சுயாதீன மதிப்பீட்டாளர் ஈடுபடுத்தப்பட்டாரா, பயன்படுத்தப்பட்ட முறைகள் மற்றும் முக்கியமான அனுமானங்கள் போன்ற தொடர்புடைய பிற விடயங்கள் நிதிக் கூற்றுக்களில் குறிப்புகளின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது சுயாதீன மதிப்பீட்டாளர் ஈடுபடுத்தப்படாததுடன் நிறுவனத்தின் இயந்திர பொறியியலாளர் மற்றும் தொழிநுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்ட குழுவொன்றின் ஊடாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டது. மதிப்பீடு செய்தல் மற்றும் கணக்கீடு செய்தல் தொடர்பான குறிப்பொன்று நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சொத்துக்கள் மீள்மதிப்பீடு நடவடிக்கைகளின் போது நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

(உ)	ரூபா 48,968,074 தொகையான பணிக்கொடை ஒதுக்கம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 19 இன் 77 ஆம் பந்தியின் பிரகாரம் அட்டுறு மதிப்பீடு முறை பயன்படுத்தப்பட்டு கணிக்கப்பட்டிராததுடன் 141 பிரிவின் பிரகாரம் தேவயையான வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும் நிதிக் கூற்றுக்கள் குறிப்பு இலக்கம் 3.4 இன் கீழ் ஊழியர் நலன்புரி பொறுப்பு நிகழ்கால பெறுமதியின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ளதாக பிறழாக காண்பிக்கப்பட்டிருந்தது.	கணக்கீட்டு நியமம் 19 இன் 77 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முறை சிறிது சிக்கலான முறையானப்படியினால் பயன்படுத்தப்படாததுடன் இந்த முறைமை பற்றி மற்றும் அதன் பிரயோகம் பற்றி கவனம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் அது பின்பற்றப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு	நிறுவனத்தினால் கூட்டுத்தொகை ரூபா 20 மில்லியனான 02 நிலையான வப்புக்கள் மற்றும் ரூபா 16.04 மில்லியனான 02 சேமிப்பு வைப்புக்கள் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் அதற்காக சட்டத்தின் பிரகாரம் நிதி அமைச்சரின் இணக்கம் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன், இந்த மேலதிக தொகை பொது திறைச்சேரியில் வைப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 16.04 மில்லியனான நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்படாது சாதாரண சேமிப்பு வைப்பொன்றில் பேணிச் செல்லப்பட்டமையினால் மீளாய்வாண்டினுள் ரூபா 841,990 ஆன வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது.	இந்த ரூபா 20 மில்லியன் நிறுவனத்திற்கு ஆரம்பத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த ரூபா 300 மில்லியனில் சேமிக்கப்பட்டிருந்த மீதியாகும். இரு சேமிப்பு கணக்குகள் நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்கு நிதி முதலீடு செய்ய முடியாமையினால் அவை சேமிப்பு வைப்புக்களில் பேணிச் செல்லப்பட்டிருநந்ததுடன் அக் கணக்குகள் தொடர்பாக பொது திறைச்சேரியிடம் பெறப்பட்ட ஆலோசனை பிரகாரம் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.	நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக முதலீட்டு நடவடிக்கைகளுக்காக உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கும், உரிய அங்கீகாரத்தின் கீழ் முதலீடு செய்யும் போது பொருனாதார ரீதியாக முதலீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(அ)	2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி வருமான சட்டத்தின் முதல் பகுதியின் (ii) ஆம்	நிறுவனம் நிறுவப்பட்ட திகதி தொடக்கம் மீளாய்வாண்டு வரையிலும் வருமான வரி அறிக்கைகள் சமர்ப்பித்தல் மற்றும் வரி செலுத்துவதற்கு	எங்கள் நிறுவனம் ஒருங்கிணைந்த நிதியிலிருந்து பணம் பெற்றுக் கொள்ளும் நிறுவனம் ஆவதுடன்	உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய

	அதிகாரத்தின் 6, 93(1), 126(1), 145 பிரிவிகள் மற்றும் 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி திணைக்கள (திருத்திய) சட்டத்தின் 38 ஆம் பிரிவு	நிறுவனங்கள் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இது வரையில் உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் வருமான வரி செலுத்தப்பட்டிராததுடன் நிறுவனத்தின் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடி பொது திறைச்சேரியிடம் மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் விசாரித்து இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுக்கப்பட்டு வரி செலுத்துவதற்கு அல்லது வரியிலிருந்து விடுவிக்கப்பட்ட நிறுவனமென்று சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(இ)	**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம்**			
(i)	நிதி பிரமாணம் 138 (7), நிதி பிரமாணம் 139 (7) மற்றும் நிதி பிரமாணம் 200 (4)	நிதி பிரமாணம் பிரகாரம் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படாது கட்டிடங்கள் புதிப்புத்தல் ஒப்பந்தமொன்று தொடர்பான இறுதிய கொடுப்பனவு செலவின நாளேட்டில் ரூபா 489,181 என காண்பிக்கப்பட்டு பிறழாக ரூபா 2,254,954 பெறுமதியான காசோலையொன்று எழுதப்பட்டு ரூபா 1,765,773 ஆன தொகைஅதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு அதிகமாக செலுத்தப்பட்ட தொகை 20 நாட்கள் பிறழ் பயன்பாட்டிற்கு இடமளிக்கப்பட்டு பின்னர் அறவிடப்பட்டிருந்த போதிலும், இந்த ஒழுங்கிண்மை தொடர்பாக விசாரணையொன்று நடத்தப்பட்டு பொறுப்பு கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நேர்ந்துள்ள தவறு ஏற்றுக் கொள்ளப்படுகின்றதுடன், அவ்வாறான தவறுகள் மீண்டும் நேராதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.	முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு குறித்த தரப்பினர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ii)	நிதி பிரமாணம் 770 மற்றும் நிதி பிரமாணம் 771	ஒப்பாய்வு சபையின் அறிக்கையொன்று இன்றி பொறுப்பிலுள்ள எந்தவொரு பொருளும் புத்தகத்திலிருந்து அகற்றுவதற்கு முடியாத போதிலும் நிறுவனத்தினால் ரூபா 40.59 மில்லியன் பெறுமதியுள்ள உபகரணங்கள் உரிய அங்கீகாரமின்றி மீளாய்வாண்டில்	செயற்திட்டங்கள் ஊடாக பெற்றுக் கொள்ளப்படும் அனைத்து உபகரணங்களும் உரிய வகையில் பயனாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அவ்	நிதி பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் சரியான பயனாளிகள் இனங்கண்டமை தொடர்பான உறுதி செய்யக் கூடிய

		புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.	உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற அரச நிறுவனங்களுக்கு உரிய வண்ணம் கையளிக்கப்பட்டுள்ளது.	ஆவணங்கள், முறையாக உடன்பட்டு தொடர்புடைய உபகரணங்கள் கையேற்றமை தொடர்பாக உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் 2018 திசெம்பர் 31 திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கையின் நிதி அல்லாச் சொத்துக்கள் மதிப்பீடு செய்யும் வழிக்காட்டலின் 2.1 ஆம் பந்தி	அரசிற்கு சொந்தமான அனைத்து காணிகளும் மதிப்பீடு செய்தல் அத்தியாவசியமானதுடன் அவற்றில் அரச அலுவலகங்கள், விடுமுறை விடுதிகள், வேலைத்தளங்கள் போன்றன நிறுவப்பட்டுள்ள அரச காணிகள் மதிப்பீடு செய்யப்படுவதற்கு முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற அநுராதபுர நகர எல்லையில் அமைந்துள்ள 19 ஏக்கர் காணி அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	நிறுவனத்தினால் பயன்படுத்தப்படுகின்ற இந்த காணி நிறுவனத்திற்கு கையளிக்குமாறு விண்ணப்பிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னும் கையளிக்கப்படாமையினால் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டு விரைவாக மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.
(உ)	2019 திசெம்பர் 17 திகதிய 08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1 மற்றும் 2.2 மற்றும் 2.4 பந்திகள்	2020 சனவரி 31 திகதிக்கு முன்னர் இலத்திரனியல் அரச பெறுகையுடன் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் வருடாந்த பெறுகை திட்டம் அமைப்பிற்கு உள்ளீடு (Upload) செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.	8/2019 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை பிரகாரம் இதுவரையில் இலத்திரனியல் அரச பெறுகையில் பதிவு செய்யப்படாத போதிலும் எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கபடும்.	சுற்றறிக்கை பிரகாம் நடவடிக்கை எடுக்கபடாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும் வரும் ஆண்டுகளில் சுற்றறிக்கை பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஊ)	2021 நவம்பர் 16 திகதிய 1/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பொது முயற்சிகளின் நிர்வாகத்திற்கான செயற்பாட்டு கையேடு			

(i)	6.6 ஆம் பந்தி	மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது வரைவு தயாரிக்கப்பட்டு வருகின்றதுடன், எதிர்காலத்தில் விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர் வரும் ஆண்டில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உறுதி செய்யும் வேலைத்திட்டமொன்று பயன்படுத்தப்படல் வேண்டும்.
(ii)	6.9 ஆம் பந்தி	நட்டங்கள் அல்லது பெற வேண்டிய மீதிகள் பதிவழிக்கப்பட முன்னர் அது தொடர்பாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன் பரிந்துரை பெற வேண்டிய போதிலும், அவ்வாறு பெற்றுக் கொள்ளப்படாது ரூபா 194,173 அறவிடப்பட முடியாத மீதிகள் புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.	இந்த மீதி மிகவும் நீண்ட காலமாக செயலில் இல்லாத கணக்கு மீதியாவதுடன் இந்த மீதி தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக தலைவரின் அங்கீகாரத்துடன் நீக்கப்பட்டுள்ளதுடன் 171 ஆம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது.	ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்பட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(எ)	2021 நவம்பர் 16 திகதிய 1/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பொது முயற்சிகளின் நிர்வாகத்திற்கான செயற்பாட்டு கையேடு			
(i)	2.6 ஆம் பந்தி	பணிப்பாளர் சபையின் செயலாளராக தகைமைப் பெற்ற கம்பனியின் செயலாளரொருவர், பட்டயக் கணக்காளரொருவர், வழக்கறிஞரொருவர் அல்லது அதற்கு சமனான தொழில்சார் தகைமையுடைய ஒரு சுயாதீன உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டியதுடன் நிறுவனத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தர் அல்லது நிறுவனத்தின் பிற பணிகளில் தொடர்புடைய உத்தியோகத்தரொருவர் பணிப்பாளர் சபையின் செயலாளராக நியமிக்கப்படக் கூடாத போதிலும் நிறுவனத்தினால் பணிப்பாளர் சபையின் செயாளலராக	இந்த விடயம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும், அதற்கு முரணாக செயற்பட்டமை தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

		பிரதான நிர்வாக உத்தியோகத்தர் (பணிப்பாளர்) நியமிக்கப்பட்டிருந்தார்.		
(ii)	3.2 ஆம் பந்தி	நிதி ஆண்டு முடிவடைந்து 05 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் வருடாந்த செயலாற்றல் மீளாய்வு கூட்டம் (APRM) நடத்தப்பட வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டிற்குரியதாக நிறுவனம் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டின் ஆணடறிக்கை தொடக்கம் எதிர்காலத்தில் இந்த கூட்டம் நடத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும், அதற்கு முரணாக செயற்பட்டமை தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.
(iii)	iv ஆம் பிண்ணினைப்பின் 1 மற்றும் 4(அ) பந்தி	வருடாந்த நிதிக் கூற்றுக்கள் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் மற்றும் தொடர்புடைய நிதி அறிக்கையிடல் தேவைப்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கும் பணிப்பாளர் சபையின் பொறுப்பு நிறைவேற்றுவதற்கு உதவி செய்தல் கணக்காய்வு குழுவின் ஒரு நோக்கமாவதுடன் அதன் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு குழுவினால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் நிறுவனத்தினால் நிதிக் கூற்றுக்கள் மீளாய்விற்காக கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்வரும் ஆண்டு தொடக்கம் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	எதிர்வரும் ஆண்டில் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஏ)	நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2023 ஆகஸ்ட் 24 திகதிய 06/2023 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவம் சுற்றறிக்கை	அரச துறைக்காக நிகழ்நிலை நிதி அல்லாச் சொத்துக்கள் முகாமைத்துவ அமைப்பு அறிமுகப்படுத்தலின் கீழ் வாகனங்களுக்கான மொடியுலில் 2023 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு ஆண்டும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுவனத்திலுள்ள அனைத்து வாகனங்களினதும் தகவல்கள் உள்ளடக்கப்பட்டு அதற்கான உறுதிப்படுத்தல் பின்தொடரும் ஆண்டின் சனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் கொம்ப்ரோலர் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்குரிய உறுதிப்படுத்தல்கள்	வாகனங்களின் அடிப்படை தகவல்கள் கொம்ப்ரோலர் பணிப்பாளர் அலுவலகத்திற்கு 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளீடு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய தகவ்கள் உள்ளீ செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும், அதற்கு அமைவாக செயற்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை மேலும், வாகனங்களின் எரிபொருள் வினைத்திறன், காப்புறுதி தகவல்கள், பராமரிப்பு மற்றும் விபத்துக்கள் தகவல்கள் அமைப்பிற்கு உள்ளீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 39,801,506 ஆன பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா 35,500,537 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,300,969 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமாக மீளாய்வாண்டில் ரூபா 12,930,390 தொகையான சொத்துக்கள் அகற்றல் நட்டமொன்று கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட செலவு ரூபா 9,092,578 இனால் அதிகரித்தமை காரணங்களாகும்.

2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது பின்வருமாறு ஆகும்.

விடயம்	2023 ரூ.	2024 ரூ.	விலகல் ரூ.	சதவீதம் %
வருமானம்				
திறைச்சேரி நடைமுறை மானியங்கள்	118,443,000	127,976,679	9,833,679	8
திறைச்சேரி மூலதன மானியங்கள்	10,234,226	27,066,630	16,832,404	164
சுய உற்பத்தி வருமானங்கள்	16,668,791	19,932,412	3,263,621	19
செலவினம்				
சம்பளம் மற்றும் படிகள்	94,017,991	112,211,050	18,193,059	19
வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்கள்	18,529,555	26,323,460	7,793,905	42
ஏனைய செலவினம்	17,934,030	16,008,854	(1,925,176)	11
ஆய்வு செயற்திட்ட செலவினம்	3,971,691	3,506,353	(465,338)	12
அபிவிருத்தி செயற்திட்ட செலவினம்	33,936,148	43,028,726	9,092,578	27

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனத்தின் உத்தியோகத்தர்களினால் தனியார் துறையுடன் தொடர்புக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வு செயற்திட்டங்களுக்காக அரசினால் 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி ஆய்வு கொடுப்பனவாக ரூபா 8,780,987 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் ஆய்வுகளினால் நாட்டின் பொருளாதாரத்திற்கான பங்களிப்பு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கான முறையொன்று தாயரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தனியார் துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படுகின்ற அவ் ஆய்வுகளின் கண்டுபிடிப்புக்கள் ஊடாக பிரதிநலன் நாட்டின் ஒட்டுமொத்த மக்களுக்கும் கிடைக்கின்றமை தொடர்பாக உறுதி செய்யப்படவில்லை.	பொதுவாக தனியார் துறையுடன் மேற்கொள்ளப்படுகின்ற ஆய்வுகளின் நோக்கம், அந்த ஆய்வுகளுக்கு கோரிக்கை விடுத்த தரப்பினருக்குத் தேவையான தொழிநுட்பத்தை வழங்குவதுடன் அத் தொழிநுட்பம் ஒப்பந்தத்தின் பிரகாரம் வேறு வெளி தரப்பினருக்கு பெற்றுக் கொடுக்க முடியாது. மேலும் அத் தொழிநுட்பத்தின் பயன்பாடு குறித்து நாங்கள் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அவசியமில்லை. மூன்று உத்தியோகத்தர்களின் ஆய்வு தொடர்பான பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளதுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். ரூபா 264,152 ஆன தொகை ஆய்வின் முதல் ஆறு மாதங்களுக்காக மட்டும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் அவ் ஆறு மாதங்களுக்கான பணிகளின் செயன்முன்னேற்றம் மற்றும் அவ் அறிக்கை ஆகியவை இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	தனியார் துறையுடன் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளினால் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படும் பங்களிப்பு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடிய ஒரு முறைமையொன்றை தயாரிக்க வேண்டும்.
(ஆ)	2017 ஆம் ஆண்டின் விவசாய அமைச்சின் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட 07 வகையான உணவுப் பொருட்களில் 04 வகையான கன உலோகங்கள் உள்ளதா என பரிசோதிப்பதற்கு செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,956,120 செலவு ஏற்கப்பட்டு 500 மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டிருந்தது. அதனுடன் தொடர்புடைய செயற்திட்ட அறிக்கை பிரகாரம் சில ஒணவுப் பொருட்களில் Cadmium, Arsenic மற்றும் Leaf போன்ற கன உலோகங்கள் அதிகபட்ச பாதுகாப்பு அளவை மிகைத்து இருப்பது உறுதி செய்யப்பட்டது. எவ்வாறாயினும், அவ் அறிக்கையின் முடிவு மற்றும் முன்மொழிவுகள் பிரகாரம் கன உலோகங்கள் அடங்கிய உணவுப் பொருட்கள் குறித்து மேலதிக	500 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு இறுதி அறிக்கை விவசாய அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தில் விவாசாய அமைச்சு வாடிக்கையாளராகவும் (customer) தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் சேவை வழங்குனராகவும் செயல்பட்டது. அதன் பிரகாரம் தொடர்புடைய அனைத்து அறிக்கைகளும் விவசாய அமைச்சிற்கு மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் மேல் நடவடிக்கைகள் குறித்து விவசாய அமைச்சின் செயலாளர் தீர்மானிக்க வேண்டும்.	செயற்திட்ட அறிக்கையின் முடிவுகள் மற்றும் முன்மொழிவுகள் பிரகாரம் உலோகங்கள் அடங்கிய உணவுப் பொருட்கள் குறித்து மேலதிக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் இவ்வாறான அவதானிப்புக்கள் பொறுப்பான அனைத்து தரப்பினருக்கும் தாடர்புக் கொள்வதற்காக முறையான அங்கீகாரத்தின் கீழ் முறையான

	விசாரணையொன்று மேற்கொள்வதற்கும் அத் தகவல்கள் பொறுபான தரப்பினருக்கு தெரிவிப்பதற்கும் நிறுவனத்தினால் நடவடிக்கை எடுத்திராததுடன் விவசாய அமைச்சிற்கு மட்டும் அறிக்கையிடப்பட்டிருந்தது.		பொறிமுறை உருவாக்கப்படல் வேண்டும்.

3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	நிறுவனத்திற்கு 2021 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான 4 ஆண்டுகள் காலப்பகுதிக்காக 34 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக ரூபா 11.79 மில்லியன் திறைசேரி மூலதன மானியங்கள் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற 11 செயற்திட்டங்கள் மற்றும் 6 புதிய செயற்திட்டங்கள் என 17 செயற்திட்டங்கள் மட்டும் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள 17 செயற்திட்டங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. திறைச்சேரி மானியங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் ஊடாக நாட்டின் தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தும் பங்களிப்பினை அளவிடுவதற்கு மற்றும் அரசு செலவழிக்கும் பணம் பொருளாதார ரீதியாக வினைத்திறனாக மற்றும் விளைத்திறனாக பயன்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்பாக ஆராய்வதற்கு பின்தொடர் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	2021 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 34 ஆராய்ச்சிகளில் 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட 17 ஆராய்ச்சிகளை தவிர்த்து ஏனைய 17 ஆராய்ச்சிகள், 2024 ஆம் ஆண்டில் நிறைவடைந்திருந்தன. பொதுவாக நிறுவனத்தின் வருடாந்த திட்டத்தில், அந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் கடந்த ஆண்டில் இருந்து முன்னெடுக்கப்பட்ட, குறிப்பிட்ட ஆண்டில் நடைமுறையிலுள்ள ஆராய்ச்சிகள் மட்டுமே உள்ளடக்கப்படுகின்றன. நிறைவு செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின் பின்தொடர் நடவடிக்கையாக, நிறுவனத்தின் ஆராய்ச்சி சமூகமயமாக்கல் குழு ஊடாக அந்த தொழிநுட்பங்கள், தொழிநுட்ப பிரச்சார பிரிவின் ஊடாக துறைக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.	ஆராய்ச்சி முடிவுகள் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பை பின் தொடரக்கூடிய ஒரு முறைமையொன்று தயாரிக்க வேண்டும்.
(ஆ)	செயற்படுத்தப்பட்டு வருகின்ற செயற்திட்டங்களுக்கு கீழான design and development of monkey and bat repellent device ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 439,038 செலவொன்று ஏற்க்கப்பட்டிருந்ததுடன் ஆண்டு இறுதியில் அதன் பௌதீக செயன் முன்னேற்றம் 100 சதவீதமாக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அதனூடாக கண்டறியப்பட்ட உபகரணம் குறித்த நோக்கத்திற்காக	இந்த செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கமாக குரங்குகள் மற்றும் ரக்கூன்களை விரட்டும் கருவியை வடிவமைத்து, மேற்படுத்துவதுடன் அக் கருவியைப் பயன்படுத்தி குரங்குகள் மற்றும் ரக்கூன்களுக்கான விரட்டும் அலைவரிசைகளைக் கண்டறிவதற்கு முன்மொழியப்பட்டது. அந் நோக்கத்தின் ஊடாக இந்த செயற்திட்டம் மூலம் விரட்டும் கருவி உருவாக்கப்பட்டு, கள பரிசோதனை ஊடாக விரட்டும் அலைவரிசைகள்	எதிர்காலத்தில் ஆராய்ச்சி முடிவுகள் ஊடாக தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்பை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டியதுடன், முடிக்கப்பட்ட உபகரணம்

	பயன்படுத்தக் கூடிய வகையில் சமூகமயமாக்கப்படவில்லை.	இனங்காணப்பட்டது. காட்டு குரங்குகள் இந்த கருவிக்கு குறிப்பிடத்தக்க விரட்டலைக் காட்டிய போதிலும், நகர்புற பகுதிகளில் உள்ள குரங்குகள் பெரும்பாலும் அதை புறக்கணித்துள்ளமை வெளிப்படுத்தப்பட்டது.	தொடர்ந்தும் அபிவிருத்தி செய்யும் சாத்தியக்கூறு உள்ளதா என்பது முறையான ஆய்வின் பின்னர் தீர்மானிக்கப்படல் வேண்டும்.
(இ)	2024 ஆம் ஆண்டின் புதிய 6 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக ரூபா 8.93 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 4.2 மில்லியன் மட்டும் செலவு செய்யப்பட்டிருந்தது. அதில் study on aflatoxin contamination in maize and its possible control measures, மற்றும் value additions to crop wastage at economic centers in Sri Lanka: a sustainable waste management approach ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக முறையே ரூபா 5.4 மில்லியன் மற்றும் ரூபா 1.15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டினுள் ரூபா 2.9 மில்லியன் மற்றும் ரூபா 263,490 ஆக 48 சதவீதத்திற்கும் குறைவான தொகை செலவு வெய்யப்பட்டிருந்தது. அவ்வாறே அவ் ஆராய்ச்சிகளின் செயற்திட்ட முன்மொழிவுகளுக்காக இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சில செயற்திட்டங்களின் பாதீடு தள்ளுபடி செய்யப்பட்டமையினால் பின்னர் செயல்நடவடிக்கைத் திட்டம் திருத்தப்படுவதற்கு சந்தர்ப்பம் பெறப்படாததுடன் ஆராய்ச்சிகள் செயற்படுத்துவதற்குரிய அங்கீகாரம் அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும். அவ்வாறே குறித்த செயற்திட்டங்களின் முன்மொழிவுகள் அமைச்சினால் வெளியிடப்படுகின்ற மாதிரியின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றமையினால் மீண்டும் இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபைக்கு நிறுவனத்தின் ஊடாக அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் அந் நிறுவனத்தினால் விசாரிக்கும் சந்தர்ப்பங்களில் மட்டும் தொடர்புடைய தகவல்கள் அவர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.	ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக இலங்கை விவாசாய ஆராய்ச்சி கொள்கை சபையின் அங்கீகாரம் பெறாமையும், செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் மேற்கொள்ளாமையும் தொடர்பாக குறித்த தரப்பினருக்கு எதிராக முயையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன் எதிர்காலத்தில் இந்த நிலைமை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.
(ஈ)	2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வரையான காலப்பகுதியில் செயற்படுத்தப்பட்டிருந்த பழங்கள் பழுக்க வைக்கும் கரிம முறையை அறிமுகப்படுத்தும் ஆராய்ச்சியின் (Induction Of Fruit Ripening By Organic method) கண்டுபிடிப்புக்களுக்காக காப்புரிமையை பெறுவதற்கு மற்றும் ஆராய்ச்சியின் முடிவுகளை வணிக ரீதியாக பிரபலப்படுத்துவதற்கும் ரூபா 9,572,715 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டம் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படவில்லை.	இந்ததாகை ஆராய்ச்சிக்கான அத்தியாவசிய ஆய்வகப் பகுப்பாய்வு உபகரணங்கள் மற்றும் வணிக ரீதியாக பயன்படுத்துவதற்காக முடிவுகளை சமூகமயமாக்குவதற்கு தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் ஆராய்ச்சி முறையாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் இனங்காணப்பட்ட தொழிநுட்பங்களின் வணிகப் பயன்பாட்டுக்கான சாத்தியக்கூறு குறைவாக இருந்தமையினால் சமூகமயமாக்கப்படவில்லை. எவ்வாறெனினும், இந்த ஆராயச்சிக்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள், அறுவடைக்கு பிந்தைய ஆராய்ச்சிகளுக்கு	ஆராய்ச்சி முடிவுகள் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் அளவில் செயற்திட்டங்கள் செயற்படுத்தும் ஒரு மேம்பாட்டுத் வேலைத்திட்டமொன்று விரைவாக அறிமுகப்படுத்தல் வேண்டும்.

அத்தியாவசிமாவதுடன் பல ஆராய்ச்சிகளுக்கு இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த ஆராய்ச்சி தொடர்பாக 03 ஆராய்ச்சி வெளியீடுகள் வெளியிடப்பட்டுள்ளன.